## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் செப்டம்பர் திங்கள் 24–ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக பி.சா.8–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95–வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: கந்தசாமி** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 69 வது பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். பி.சா.8 ன் ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.53 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.11.2008 தேதியிட்ட எனது பெயரிலான கிரைய ஆவணம் எண்.7080/2008 ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.54 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 கணினி நகல் பி.வா.சா.ஆ.55 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 62, 64, 65, 67, 68, 70 முதல் 72, 75 முதல் 100, 102 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் 79, 80 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.55 பட்டாவின் கீழ் வரி செலுத்தியுள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.54 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.54 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.54 ஆவணம் சட்டப்படி செல்லாது என்பதால் பி.வா.சா.ஆ.54 ன் அடிப்படையில் பெறப்பட்ட பி.வா.சா.ஆ.55 செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.